[1971 டிசம்பர் 18

Bureau of Parliamentary work

* 562 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Labour be pleased to state :

(*a*) whether the Bureau for Parliamentary work has forwarded the Resolutions of the South Indian Cinema Employees Union to the Government about 6th May 1971; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) & (இ) இல்லை. தென்னிந்திய சினிமா ஊழியர் சங்கத்தின் தீர்மானங்கள் எதுவும் பாராளுமன்ற வேலைக் குழுவிடமிருந்து இவ்வரசு பெறவில்லை.

சீரணி தனி அதிகாரிகள் கடமைகள்

*563 **வினா—திரு. தோப்பூர் திருவேங்கடம் :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) சீரணிப்படை தனி அதிகாரிகள் கடமைகளும், பொறுப்புகளும் என்ன ?

(இ) மாவட்ட அளவில் சீரணிப்படை அதிகாரிகளை நியமிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) அவையின் முன் ஒரு அறிக்கை@ வைக்கப்பட்டுள்ளது.

(இ) தற்போதைக்கு இல்லை.

திரு. கோ. இளங்கோவன் : தலைவரவர்களே, சீரணிப்படையில் உள்ளவர்கள் ஆண்டுக்கு ஒரு முறை தங்கள் அங்கத்தினர் பதிவைப் புதுப்பித்துக்கொள்ளவேண்டும் என்ற விதிமுறை உள்ளதா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, அம்மாதிரியான விதிமுறை ஒன்றுமில்லை.

திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, சீரணிப்படைக்கு இன்னும் அதிகமாக உறுப்பினர்களைச் சேர்க்கின்ற வகையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

@ 119-120-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

1971 டிசம்பர் 18]

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்தச் சேரணிப் படையினர் நகராட்சிப் பகுதிகளிலும் பணிபுரிகின்ற வாய்ப்பை உருவாக்க அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. என் வி. நடராசன் : தலைவரவர்களே, உறுப்பினரின் யோசனை சந்தர்ப்பம் வரும்போது பரிசீலிக்கப்படும்.

State Social Welfare Board

* 564 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to divert funds to the State Social Welfare Board, for distribution to private agencies ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) & (ஆ) மாநில சமூகநல வாரியத்தின் வேண்டுகோளின்படி அரசு, 1971-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்களில் தானே முன்வந்து சமூக நலத் தொண்டு செய்யும் ஐந்து நிறுவனங்களுக்கு ரூபாய் 5,000 (ஐயாயிரம்) மானியமாக வழங்குவதற்கு வாரியத்திற்கு ஒப்பளிக்கப்பட்டிருக்கிறது.

கோவை மாவட்ட மலைப்பகுதி மக்கள்

* 565 வினா—திரு. ஈ. எம். நடராசன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கோவை மாவட்டம், மலைப்பகுதியில் உள்ள மலைஜாதி மக்களுக்கு அரசு இதுவரை என்னென்ன நன்மைகள் செய்துள்ளது ?

(இ) அவர்களில், உயர்நிலைப்பள்ளிகள், கல்லூரிகளில் படிக்கும் மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கை என்ன ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) & (இ) கேட்கப்பட்டுள்ள விவரங்கள் அடங்கிய அறிக்கை @ பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. ஈ. எம். நடராசன் : தலைவரவர்களே, பவானி வட்டத்தின் பர்கூர் மலைப்பகுதியில் இருக்கின்ற மலைசாதி மக்களுக்காக இதுவரை கல்வி, வீடு, இணைப்புச் சாலைகள், குடிநீர் வசதி, கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற வசதிகளெல்லாம் அளிக்கப்படவில்லை. ஆகவே, அரசு அதைப் பரிசீலனை செய்து, பர்கூர் மலைப்பகுதியில் இருக்கின்ற மக்களுக்கு வசதி செய்ய முயற்சி செய்யுமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

@ 120-122-ம் பக்கங்களில் மூன்றாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.